இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 18.04.2026

# மகளிர் இட ஒதுக்கீட்டை எதிர்க்கிறோமா?

மகளிர் இட ஒதுக்கீட்டை தி.மு.க. எதிர்க்கிறது என்பது போன்ற தோற்றத்தில் பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு வைத்துள்ளார். மகளிருக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை தி.மு.க. எதிர்க்கவில்லை. மகளிர் இடஒதுக்கீட்டை முன்னிறுத்திக் கொண்டு நியாயமற்ற தொகுதிவரையறையையும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் திருத்தம் செய்வதையும்தான் எதிர்க்கிறோம்.

**“பெண்களுக்கான 33 விழுக்காடு இட ஒதுக்கீட்டை நாங்கள் முழு மனதோடு ஆதரிக்கிறோம். அதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை. ஆனால், பொறுப்போடு செயல்பட்ட மாநிலங்களைத் தண்டிக்கும் வகையில் தொகுதி எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் கோருகிறோம். அவர்களின் நோக்கம் உண்மையானதாக இருந்தால், இப்போதுள்ள தொகுதி அளவிலேயே மகளிருக்கான 33 இட ஒதுக்கீட்டை வழங்குவதை எதுவும் தடுக்கவில்லையே?” என்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை வெளியிட்டு இருந்தார்கள்.**

மகளிருக்கான 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை உடனடியாக வழங்காமல் இழுத்தடித்தது பா.ஜ.க. அரசுதானே?

மகளிருக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு சட்டத்தை 2023 ஆம் ஆண்டு நிறைவேற்றியது பா.ஜ.க. அரசு. அதனை உடனடியாகச் செயல்படுத்த முடியாத அளவுக்கு பா.ஜ.க.வே தடை போட்டுக் கொண்டது.

“மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு - அதை வைத்து தொகுதி மறுவரையறைகள் முடிந்த பிறகு - அதனடிப்படையில் 33 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்குவோம்” என்று சொல்லப்பட்டு இருந்தது. அப்படியானால் மக்கள் தொகைக் கணக்கெடுப்பையும், அதனடிப்படையில் தொகுதி மறுவரையறையையும் செய்யவே பத்து ஆண்டுகள் ஆகும். அதன்பிறகுதான் மகளிருக்கு 33 விழுக்காடு தரப்படும் என்று தள்ளிப் போட்டார்கள். உண்மையில் மகளிர் இடஒதுக்கீட்டில் அக்கறை இருந்தால் உடனடியாக அமல் ஆகும் என்று அல்லவா பா.ஜ.க. அப்போது சொல்லி இருக்க வேண்டும்?

மகளிர் இடஒதுக்கீட்டில் பா.ஜ.க.வுக்கு அக்கறை உண்டா? 2014 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது. வந்ததும் ஏன் இதனைக் கொண்டு வரவில்லை? 2016-ஆம் ஆண்டு மார்ச் 8-ஆம் தேதி ‘மகளிர் நாள்’ அன்று நாடாளுமன்றத்தின் மக்களவை - மாநிலங்களவை ஆகிய இரண்டிலும் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த பெண் எம்.பி.க்கள் அனைவரும் இதற்காகக் குரல் கொடுத்தார்கள். “33 விழுக்காடு இடஒதுக்கீடு என்ன ஆனது?” என்று கேட்டார்கள். அப்போது பா.ஜ.க. அரசு வாய் திறக்கவில்லை.

சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்கள், குடியுரிமைத் திருத்தச் சட்டம், காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பறிப்புச் சட்டம் மற்றும் முற்பட்ட சாதியினருக்கு 10 விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கும் சட்டங்களை நிறைவேற்றுவதில் காட்டிய அக்கறையில் 100- இல் 1 விழுக்காடுகூட மகளிர் மசோதாவை நிறைவேற்ற மோடி அரசு அக்கறை காட்டவில்லை.

**2014-ஆம் ஆண்டும், 2019-ஆம் ஆண்டும் நடந்த தேர்தல்களில் பெரும்பான்மையைப் பெற்றது பா.ஜ.க அரசு. நினைத்திருந்தால் அவர்கள் அதனை உடனடியாக நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் செய்யவில்லை. ஏன் செய்யவில்லை? 2023 ஆட்சி முடியும் போது, மகளிரை ஏமாற்றக் கொண்டு வந்தார்கள்.**

‘பெண்களைப் பாதுகாக்க வேண்டும், சுதந்திரம் தரக்கூடாது’ என்ற அரிய தத்துவம் சொன்னவர் இன்றைய உ.பி. முதலமைச்சர் யோகி ஆதித்யநாத். 2010ஆம் ஆண்டு பெண்கள் இடஒதுக்கீடு சட்டத்தை எதிர்த்த பா.ஜ.க. உறுப்பினர்களில் அவர் முக்கியமானவர். 2014 ஆம் ஆண்டு தனது இணையத் தளத்திலும் எதிர்த்து எழுதி இருக்கிறார். இப்படிப்பட்டவர்கள் பா.ஜ.க.வில்தான் இருக்கிறார்கள். மகளிர் சேரக் கூடாது என்று அமைப்பு தொடங்கிய ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வாரிசுகள்தானே இவர்கள்?

**இப்போது அவர்கள் 33 விழுக்காடு இடஒதுக்கீட்டை உடனடியாக அமல் செய்யத் துடிப்பது மகளிர் மீதான அக்கறையால் அல்ல. அந்தச் சட்டத்தைக் காட்டி நாடாளுமன்றத் தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான்.**

மகளிர் உரிமை குறித்தோ, மகளிர் விடுதலை குறித்தோ, மகளிருக்கான அதிகாரம் குறித்தோ தி.மு.க.வுக்கு யாரும் பாடம் எடுக்கத் தேவையில்லை. திராவிட இயக்கத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று, மகளிர் முன்னேற்றம்தான்.

திராவிட இயக்கத்தில் ஆரம்ப கால அமைப்பான நீதிக்கட்சி ஆட்சியில்தான் பெண்களுக்கு முதன்முதலில் வாக்குரிமை தரப்பட்டது. அந்த வழித்தடத்தில் வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், சுயமரியாதை திருமணச் சட்டத்தை இயற்றினார்கள். “பெண்ணுக்கு சொத்தில் சம பங்கு” உரிமை கொடுத்தார் தலைவர் கலைஞர் அவர்கள். இது 1929 ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் நிறைவேற்றிய தீர்மானம். அதனை 1989 ஆம் ஆண்டு நிறைவேற்றியவர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள். பெண் காவலர்களை உருவாக்கியவர் கலைஞர். மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி அவர்களை தொழில் முனைவோர்களாக ஆக்கியவர் கலைஞர்.

உள்ளாட்சி அமைப்புகளில் 33 விழுக்காடு இடஒதுக்கீட்டைக் கொடுத்தவர் கலைஞர். அதாவது சட்டமன்றத்தில், நாடாளு மன்றத்தில் இடஒதுக்கீடு வழங்குவதற்கு முன்னதாகவே உள்ளாட்சி அமைப்புகளில் வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள். அதனைத் தொடர்ந்தவர் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் மேயர் பொறுப்புகளில் 11 பதவி இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்தம் உள்ள இடங்கள் 21 என்றால் அதில் 11 இடங்கள் பெண்களுக்குத் தரப்பட்டுள்ளன. உள்ளாட்சி அமைப்புகளின் பதவியிடங்களில் 50 சதவிகித இடங்கள் பெண்களுக்குத் தரப்பட்டுள்ளன. அந்த அடிப்படையில் பங்கீடு மிகச் சரியாகச் செய்யப்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிவகை காட்டியுள்ள ‘பெண்களுக்கான ஒதுக்கீடு’ என்பது, காலப்போக்கில் பெண்களின் அரசியல் சுதந்திரத்திற்கு அடித்தளம் அமைப்பதாக அமைந்துள்ளது. இத்தகைய திராவிட முன்னேற்றக் கழகத்தைதான், மகளிர் இடஒதுக்கீட்டை எதிர்ப்பதாகச் சொல்கிறார் பிரதமர். இது எதுவும் தெரியாமல் பேசிக் கொண்டிருக்கிறார் பிரதமர் மோடி.

---

### கழகத் தலைவரும் - முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின்

# விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை!




சென்னை, ஏப். 18 -

கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.4.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், பிரிட்டிஷாரைக் கலங்கடித்த தமிழ் வீரர் விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வின்போது, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, மருத்துவ அணித் தலைவர் கனிமொழி என்,வி,என், சோமு, துணை அமைப்புச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, தலைமை நிலைய அலுவலக செயலாளர் துறைமுகம் காஜா மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

---

### ஆதிக்கவாதிகளையும், அடிமைகளையும் எதிர்த்து வெல்வோம்!

# தீரன் சின்னமலை பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவில் உறுதி!

**சென்னை, ஏப். 18-**

**கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவில், பிரிட்டிஷாரைக் கலங்கடித்த தமிழ் வீரர் தீரன் சின்னமலை பிறந்தநாளில் ஆதிக்க வாதிகளையும், அடிமைகளையும் எதிர்த்து வெல்வோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.**



தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:-

❖ அன்று, நேரடியாகப் போரிட்டு வெல்ல முடியாத ஆங்கிலேய ஆதிக்கவாதிகள் சூழ்ச்சியால்தான் சின்னமலையை வீழ்த்த முனைந்தார்கள்!

❖ இன்றோ, தமிழ்நாட்டுக்குள் நேரடியாக நுழைய முடியாத டெல்லி ஆதிக்கவாதிகள் ‘தொகுதி மறுவரையறை’ எனும் சதித் திட்டத்தால் நம்மை அரசியல் வலிமையற்றவர்களாக்க முனைகிறார்கள்.

❖ அன்று, சின்னமலையைக் காட்டிக் கொடுத்தான் ஒரு துரோகி. இன்றும் சில அடிமைகள் தங்கள் சுய நலத்துக்காகத் தாய்த்தமிழ்நாட்டின் எதிர்காலத்தையே RSS எஜமானர்களின் காலடியில் அடகு வைக்கின்றனர்.

❖ இந்த ஆதிக்கவாதிகளையும் அடிமைகளையும் எதிர்த்து “தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!” எனத் தீரன் சின்னமலை அவர்களின் பிறந்தநாளில் சூளுரைக்கிறேன்! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

### திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில்

# அ.தி.மு.க.வினர் 1000க்கும் மேற்பட்டோர் விலகல்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்!

திருவண்ணாமலை, ஏப்.18-

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியிலிருந்து விலகி, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

16.04.2026 வியாழக்கிழமை காலை 12.00 மணிக்கு திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தொகுதியைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட அ.தி.மு.க.வினர் அக்கட்சியிலிருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

கீழ்அணைக்கரை, சாவல்பூண்டி, நல்லவன் பாளையம், கோரிமேட்டுத் தெரு, அண்ணா நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வழக்கறிஞர் பிரிவு நகர செயலாளர் எம்.எஸ்.எம்.சல்மான் தலைமையில், மாணவர் அணி எம்.எஸ்.எம்.அஜிஸ், முகமது சேட்டு, எம்.எஸ்.சாதிக், ஆட்டோ சங்கத் தலைவர் எம்.எஸ்.பாபு, எம்.எஸ்.சான், இளைஞர் அணி எம்.எஸ்.ஷாருக், கே.எம்.கரீம், எம்.எஸ்.சுல்தான் முன்னா, மஜீத், சையத் இலியாஸ், அலவுதீன், சௌந்தர், அமானுல்லா, அப்பாஸ், ஷபீர், அஸ்கர், இப்ரான், சாதிக், முன்னா, விஜய், எம்.தாஜ்தீன், எஸ்.ஷமீரா, எம்.ஆலியா, ஏ.அப்துல்ரகுமான், எஸ்.காதர், ஆர்.அமீர், ஐ.சரிதா, ஏ.திவ்யா, வி.அன்வர், எஸ்.பாத்திமா, எஸ்.கமால், ஏ.ரிகானா, ஒய்.இலியாத், ஆர்.பாசில், வி.நூர், ஷபியா, தாவூத், ஆரீஸ், எம்.ஆர்.தாரிக், டி.இத்ரீஸ், எஸ்.சுமதி, கவின், கே.ஜீவன், எம்.இலட்சுமி, எஸ்.யாழினி, எம்.எஸ்.மீரா, தமிழ் செல்வி, வெண்ணிலா, வீரா, அருள், செந்தில், வி.சத்யா உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

தி.மு.க.வில் இணைந்த அனைவருக்கும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கைத்தறி ஆடை அணிவித்து வரவேற்றார்.

கழகத்தில் இணையும் நிகழ்ச்சியினை பகுதி செயலாளர் பா.ஷெரீப், முன்னாள் நகரமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம்.மாலிக் ஆகியோர் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாநில அமைப்புசாரா தொ.மு.ச. ஏ.ஏ.ஆறுமுகம், பீரங்கி.வெங்கடேசன், முன்னாள் ஊராட்சி தலைவர் ஏ.முத்துகுமார், அன்வர்பாஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### தூபிகளில் உள்ள சிங்கங்கள்

# தென்னிந்தியர்களைத் தின்று விடக்கூடாது !

நாடாளுமன்றத் தொகுதிகளின்
மறு வரையறை குறித்து
இந்திய
இறையாண்மையைப் போலவே
அறிவுலகமும் அச்சப்படுகிறது

இந்தியா
தெற்கு என்ற திசையைக்
கழித்துவிட்டு
மூன்று திசைகளோடு இயங்க
முடிவுகட்டியிருப்பதாய்த்
தோற்றம் தருகிறது

இந்த மறுவரையறை
மக்கள் தொகையை
முன்னிறுத்துகிறதா
மாநில நலன்களை
முன்னிறுத்துகிறதா
என்ற கேள்விகளோடு
விவாதிக்கப்பட வேண்டும்

வட இந்தியாவைவிடத்
தென்னிந்தியாவின்
உறுப்பினர் எண்ணிக்கை குறைவது
இந்தியா தன் உறுப்பையே
குறைத்துக்கொள்வது போன்றதாகும்

விந்திய மலைக்குத்
தெற்கே உள்ளது விந்தியா என்றும்,
வடக்கே உள்ளதே இந்தியா என்றும்
ஒரு பூகோளப் புரட்சி நடப்பதற்கு
இந்தப் புது மசோதா வழிவகுக்கும்

பெண்களுக்கு இட ஒதுக்கீடு
தேவையெனில்
இருக்கும் தொகுதிகளைப்
பிரித்துக்கொடுக்கலாமே!
அல்லது அமைச்சரவையில்
மூன்றில் ஒரு பங்கு
இடமளிக்கலாமே!

நாடு
கடினமான பலகேள்விகளைக்
கடக்கவேண்டி இருக்கிறது

பெரியவர்களே
சிந்தியுங்கள்

தூபிகளில் உள்ள சிங்கங்கள்
தென்னிந்தியர்களைத்
தின்றுவிடக் கூடாது

**கவிப்பேரரசு**
**வைரமுத்து**

